# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1931 - 2015 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2015.09.04

*1931 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1236 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனை | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1239 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1240 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

**ஜா-எல நகர சபை**

*பதவி வெற்றிடங்கள்*

*மேல் மாகாண அரசாங்க சேவையில் ஜா-எல நகர சபையில் வெற்றிடங்களாகவுள்ள கீழ்க் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு குறிப்பிட்டுள்ள தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | திண்மக்கழிவு முகாமைத்துவ மத்திய நிலைய பொறுப்பாளர் தரம் III | 1 | ரூ 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 எம்என் 1 - 2006ஏ | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ; மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொது சாதாரண பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல். |
| 2 | வருமான வரி பரீட்சகர் தரம் III | 1 | ரூ 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 எம்என் 1 - 2006ஏ | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொது சாதாரண பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல். |
| 3 | சுகாதார நிருவாகத்தர் தரம் III | 1 | ரூ 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 எம்என் 1 - 2006ஏ | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொது சாதாரண பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல். |
| 4 | அலுவலக ஊழியர் சேவை தரம் III | 1 | ரூ 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 பீஎல் 1 - 2006ஏ | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் |
| 5 | சாரதிகள் II "ஆ" | 3 | ரூ 12,470-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,860 பீஎல் 2 - 2006ஏ | குறிப்பு இல. 1 ஐப் பார்க்கவும். |

**குறிப்பு இல. 1**

**சாரதி பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (இவற்றில் ஐந்து பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) ;

(ii) பிரத்தியேக/கூலி வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்நகருக்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் (விசேடமாக வெகன்) செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்த ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) வாகனச் சாரதியாக ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும் ;
(iv) ஆகக்குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்;
(v) இரவு மற்றும் பகல் வேளைகளில் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும்;
(vi) பெருவீதிகள் சட்ட கோவைப்பற்றிய நல்லறிவு இருத்தல் வேண்டும்.

நடைபெறவிருக்கும் செயன்முறை பரீட்சை மற்றும் வீதி ஒழுங்குகள் பற்றிய பரீட்சையில் ஆகக்குறைந்து 40% புள்ளிகளை பெறுதல் வேண்டும்.

**2. ஏனைய நிபந்தனைகள்:**

(அ) வருமானவரிப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பதாரிகள் விவேக மற்றும் புலமை பரீட்சைக்காக ஒரு மணித்தியால வினாத்தாள் மற்றும் பொது அறிவு பரீட்சைக்கு ஒரு மணித்தியால வினாத்தாளுக்கும் தோற்றி அதில் சித்தி பெறுதல் வேண்டும். ஒரு வினாத்தாளுக்கு ஆகக்கூடியது 100 புள்ளிகளும் சித்திபெறும் புள்ளிகளாக 40% மும் கருதப்படுவதுடன் கூடிய புள்ளிகளை பெற்றவர்கள் வெற்றிடங்களிற்காக சேர்த்துக்கொள்ளப்படுவர். தகைமைகளை பரீட்சிப்பதற்காக மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக தோற்றச்செய்வதுடன் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ஆ) சுகாதார நிர்வாகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரிகள் விவேக மற்றும் புலமை பரீட்சைக்காக ஒரு மணித்தியால வினாத்தாள் மற்றும் தற்போதைய நிகழ்வுகள் பற்றிய பொது கிரகித்தல் பரீட்சைக்கு ஒரு மணித்தியால வினாத்தாளுக்கும் தோற்றி அதில் சித்தி பெறுதல் வேண்டும். ஒரு வினாத்தாளுக்கு ஆகக்கூடியது 100 புள்ளிகளும் சித்தி பெறும் புள்ளிகளாக 40%மும் கருதப்படுவதுடன் வெற்றிட எண்ணிக்கையைவிட கூடிய புள்ளிகளை பெற்ற இரண்டு மடங்கினர் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவதுடன் இப்பரீட்சைகள் இரண்டிலும் ஆகக்கூடிய புள்ளிகளை பெறுவோர் வெற்றிடங்களுக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**3. பொது நிபந்தனைகள்:**

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அலுவலக ஊழியர் சேவைக்கு மட்டும் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.);

(ஆ) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(இ) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும். ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டால் ஒரு மாதத்திற்குள் அரச வைத்தியரால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுவதுடன் அப்பரீட்சையில் தேகாரோக்கியத்தில் தகுதியற்றவரென தெரியுமிடத்து நியமனம் இரத்துச்செய்யப்படும்;

(ஈ) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;

(உ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதியில் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்;

(ஊ) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராக இருத்தலும் கூடாது.

**4. ஆட்சேர்ப்பு செய்யும் நிபந்தனைகள்:**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;
(ஆ) விதவைகள்/தபுதாரர், அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;
(இ) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டவராவர்; இக்காலப்பகுதியில் வரவு, வேலை மற்றும் ஒழுக்கம் திருப்திகரமானதாக இருப்பின் தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர்; ஏலவே, அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டோர் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காப்பகுதியின்கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்;
(ஈ) இவ்வாட்சேர்ப்பு நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபையினால் அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது ஜா-எல நகர சபையினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைந்தொழுக கட்டுப்பட்டதாதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவங்களை தயாரித்து பூர்த்திசெய்து 2015.10.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “செயலாளர்,

நகர சபை, ஜா-எல" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

* ஏலவே அரச/மாகாண அரசாங்க சேவையில் உள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்;
* ஏலவே இந்நிறுவனத்தில் பதிலீட்டு, அமைய அல்லது தற்காலிக பதவிகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;
* கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களில் பதவிகளில் ஆட்சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவியுயர்வுகளின் ஏற்பாடுகளின்கீழும் பொது நிருவாக சுற்றறிக்கை 20/2009 இற்கு அமையவும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்.

விண்ணப்பம் கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கடையில் இவ்வாட்சேர்ப்புகளை தாமதித்தல் அல்லது மாற்றம்செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் ஆகியவற்றுக்கான சகல தத்துவங்களும் ஜா-எல நகர சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

டி. ஏ. சிறியாணி ரம்யலதா,
செயலாளர்,
ஜா-எல நகர சபை.

நகர சபை,
ஜா-எல,
2015, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஜா-எல நகர சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில்........................... பதவி

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.
2. நிரந்தர விலாசம் :-----.
3. நிரந்தர மாவட்டம் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பிறந்த திகதி : ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.
6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று வயது : வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
7. பால் (ஆண்/பெண்) :-----. குடியுரிமை நிலை (விவாகமானவரா/விவாகமாகாதவரா) :-----.
8. இலங்கை பிரசை பதிவின் மூலமா? பரம்பரையாகவா ? :-----.
9. கல்வித் தகைமைகள் :-----. (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
   கல்வி பயின்ற பாடசாலை :-----.
   சித்தி அடைந்த அதியுயர் பரீட்சை :-----.
10. (i) ஏனைய தகைமைகள் :-----.
    (ii) தொழில்சார் தகைமைகள் :-----.
    (iii) சேவை அனுபவம் :-----.
11. நீர் தற்போது இந்நகரசபையில் சேவையாற்றுபவராயின், சேவைக்காலம் மற்றும் விபரம் :-----.
    அப்பதவியின் தன்மை : நிரந்தர/அமைய/தற்காலிக
12. நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீரா? :-----.

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

9-85

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அரநாயக்க பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் பிரிவுகளின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள்/வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமைகோருவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமாக பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*டீ. எம். சந்ராவதி,*
*செயலாளர்,*
*அரநாயக்க பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அரணாயக,*
*2015, ஒகத்து 13.*

### அட்டவணை

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | உஸ்ஸாபிட்டிய வீ விஸ்ஸஹேன பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அஸ்மடல எரவ்பொல பாதையில் ஆரம்பித்து வீ விஸ்ஸ இறப்பர் காணி வரையான பாதை |
| கிராம அலுவலர்ப் பிரிவு | : | 17 உஸ்ஸாபிட்டிய |
| பாதையின் நீளம் | : | 49.5 மீற்றர், |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :*

| | | |
|---|---|---|
| 1. | திரு. பீ. ஆர். லால் நிஷாந்த பண்டார | வீ விஸ்ஸஹேன காணி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :*

| | | |
|---|---|---|
| 1. | திரு. யூ. ஷாமிக ஜனித் கீர்திரத்ன | கஹட்டகும்புர காணி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பக்குல்வல அத்தனதெனிய கம்மெத பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | மாஓயா ஓரப்பாதையிலிருந்து கம்மெத பாதை விரிந்து மறுபடி மாஓய பாதைக்கு சேரும் பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 44A - ஹமலக்காவ |
| பாதையின் நீளம் | : | 327 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :*

| | | |
|---|---|---|
| 1. | திருமதி எம். ஏ. உதுலாவதீ | இலகொட்டுபொலவத்த காணி |
| 2. | திரு. ஆர். வீ. யூ. திலங்க விஜேசிங்ஹ | நாகஹமுலஹேன காணி |
| 3. | திரு கே. கே. குணதிலக | அரம்ப காணி |
| 4. | திரு. எம். ஆர். முதுபண்டா | ஹிட்டினாவத்த காணி |
| 5. | திருமதி ஏ. ஜீ. பொடிமெனிகே | ஹிட்டினாவத்த காணி |
| 6. | திரு. ஏ. ஜீ. பொடிராலஹாமி | ஹிட்டினாவத்த காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி எம். ஏ. உதுலாவதீ | இலகொட்டுபொலவத்த காணி |
| 2. திரு. ஆர். வீ. யூ. திலங்க விஜேசிங்ஹ | நாகஹமுலஹேன காணி |
| 3. திரு கே. கே. குணதிலக | அம்பகொடேஹேன காணி |
| 4. திரு. ஏ. பீ. சமன் பண்டார | அம்பகொடேஹேன காணி |
| 5. திரு. எஸ். எம். விஜேதிலக | அம்பகொடேஹேன காணி |
| 6. திரு. ஏ. ஜீ. பொடிராலஹாமி | ஹிட்டினாவத்த காணி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கொட்டுன்ன கம்மெத படிபெல பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | லம்புட்டுவ பாடசாலை அருகில் ஆரம்பித்து ஏக்கர் 25 பிரதான பாதை வரையான பாதை |
| கிராம அலுவர் பிரிவும் இலக்கமும் | : | 17 B கட்டுகஹ |
| பாதையின் நீளம் | : | 62 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 6 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு யூ. வீ. மலிந்தா | பொல்கொட்டுவ வத்த காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. யு. வீ. பிரேமதாஸ | அம்பதெனியவத்த கட்டுகஹ 38 ஆம் இலக்க காணி |
| 2. திரு. யு. வீ. மலிந்தா | பொல்கொட்டுவ வத்த காணி |
| 3. திரு. யு. வீ. ஜேமிஸ் | பொல்கொட்டுவ வத்த காணி |

9-30

# நானாவித அறிவித்தல்கள்

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 147, 148, 149, 150, 152 (1), 109(ஈ), 127 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச சபையின் 2015.08.10 ஆந் திகதிய 1 ஆம் இலக்க பிரேரணையின் பிரகாரமும் 2016 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் கீழே குறிப்பிட்ட அட்டவணைகளில் தரப்பட்ட வியாபாரங்களிலிருந்து உரிமக்கட்டணமும் அல்லது வரியும் வாகனங்கள் மற்றும் வருடாந்த வரியும் விதிக்கப்படும் என்பது அறியத்தருகின்றேன்.

2016 ஆம் ஆண்டு உரிமக்கட்டணங்களும் வரிகளும் 2016 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.

சு. விஜயதாஸ்,
செயலாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.

### அட்டவணை 1

### உரிமக்கட்டணங்கள்

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 1 | தேநீர்க்கடை வைத்திருத்தல் | 400 0 |
| 2 | தேநீரும் சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல் | 1,000 0 |

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 3 | ஒரு சாதாரண சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 500 0 |
| 4 | பேக்கரி வைத்திருத்தல் | 1,500 0 |
| 5 | முடிவெட்டும் இடத்தை வைத்திருத்தல் | 1,000 0 |
| 6 | ஒரு சலவைக் கடை வைத்திருத்தல் | 400 0 |
| 7 | மினி சினிமா காட்டும் இடத்தை வைத்திருத்தல் | 1,000 0 |
| 8 | சீமெந்து பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1,500 0 |
| 9 | கட்டடப்பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 2,000 0 |
| 10 | இரும்புப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 2,000 0 |
| 11 | 25 பொதிக்கு மேல் சீமெந்து விற்பனை | 2,000 0 |
| 12 | தச்சுத் தொழிற்சாலை (மனிதவளம்) வைத்திருத்தல் | 2,000 0 |
| 13 | இயந்திரம் மூலம் மரம் அறுக்கும் ஆலை வைத்திருத்தல் | 2,000 0 |
| 14 | பனிக்கட்டி தயாரிக்கும் இடம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 15 | பனிக்கட்டி விற்பனை செய்தல் | 1,000 0 |
| 16 | ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் | 2,000 0 |
| 17 | ஐஸ்கிறீம் குளிர்பானம் விற்பனை செய்தல் | 1,000 0 |
| 18 | இனிப்பு, ரொபி விற்பனை செய்யும் இடம் வைத்திருத்தல் | 400 0 |
| 19 | மரக்கறிக்கடை வைத்திருத்தல் | 1,200 0 |
| 20 | பால் சேகரித்தல் விற்பனை செய்தல் | 3,000 0 |
| 21 | மொத்த வியாபரத்திற்காக 10 அந்தர் அல்லது அதற்கு மேல் மா, சீனி, அரிசி, உப்பு வைத்திருத்தல் | 3,000 0 |
| 22 | பலசரக்கு கடை வைத்திருத்தல் | 1,500 0 |
| 23 | அரிசி விற்பனை செய்தல் | 1,000 0 |
| 24 | சாராயம் அல்லது பிற நாட்டு மதுபானசாலை அல்லது விற்பனை நிலையம் | 3,000 0 |
| 25 | கள்ளு சேகரிக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 3,000 0 |
| 26 | சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 |
| 27 | மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 28 | மோட்டார் வாகனங்கள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 2,000 0 |
| 29 | காய்ச்சி ஓட்டும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 30 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 2,500 0 |
| 31 | சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 1,000 0 |
| 32 | மின் பொருட்கள், விசிறிகள், மோட்டார்களை திருத்துதல் | 1,000 0 |
| 33 | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி திருத்துமிடம் | 1,200 0 |
| 34 | மின்சார பொருட்கள் விற்பனை செய்தல் | 1,500 0 |
| 35 | டீசல், மண்ணெண்ணெய் விற்பனை செய்தல் | 2,500 0 |
| 36 | தனிப்பட்ட மேற்கத்தைய வைத்தியசாலை வைத்திருத்தல் | 1,500 0 |
| 37 | மேற்கத்தைய மருந்து வகைகளை வைத்திருத்தல் விற்பனை செய்தல் | 1,500 0 |
| 38 | பிளாஸ்றிக் பொருட்கள் விற்பனை செய்தல் | 1,500 0 |
| 39 | பெயின்ட், வாணிஸ் பூச்சுக்களை விற்பனை செய்தல் | 1,000 0 |
| 40 | நெல், அரிசி, மா அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1,500 0 |
| 41 | மிளகாய், கோப்பி அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1,500 0 |
| 42 | புகைப்படக் கலையகம் வைத்திருத்தல் | 1,500 0 |
| 43 | தொலைக்காட்சி சினிமா கசற்றுக்களை, இறுவெட்டுக்கள் விற்பனை அல்லது வாடகைக்கு விடுதல் | 1,500 0 |
| 44 | போட்டோ பிரதி கடை வைத்திருத்தல் | 1,000 0 |
| 45 | விசேட வைபவங்களுக்கான பொருட்களை வாடகைக்கு விடும் நிலையத்தை வைத்திருத்தல் | 2,500 0 |
| 46 | வியாபார நோக்கு தொலைதொடர்பு பெக்ஸ் சேவை | 1,000 0 |
| 47 | அரிசி ஆலை கோட்டா மில் | 3,000 0 |
| 48 | கல்வி நிலையம் | 1,000 0 |
| 49 | வங்கி வர்த்தகம் | 3,000 0 |
| 50 | பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் | 1,500 0 |
| 51 | பொது மண்டபம் வைத்திருத்தல், வாடகைக்கு விடுதல் | 2,500 0 |
| 52 | புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1,500 0 |
| 53 | பசளைக் கடை, விவசாய உரங்கள் விற்பனை செய்தல் | 2,000 0 |
| 54 | நகையகம் | 2,500 0 |
| 55 | தையல் நிலையம் | 1,500 0 |
| 56 | எரிவாயு நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 57 | செங்கல் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 58 | மாட்டுப்பட்டி வைத்திருத்தல் (10 இற்குள்ளே) | 100 0 |
| 59 | பப்படம் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 60 | தொலைத்தொடர்பு கோபுரம் வைத்திருத்தல் | 3,000 0 |
| 61 | கருங்கல் ஆலை நடாத்துதல் | 3,000 0 |
| 62 | புத்தகசாலைகள் நடாத்துதல் | 1,000 0 |
| 63 | விளம்பர பலகைகளுக்கான கட்டணம் (1 சதுர அடி) | 100 0 |
| 64 | குழாய்க்கிணறு பராமரிப்புக் கட்டணம் (1 வருடம்) | 1,500 0 |
| 65 | வாகன தரிப்பிட கட்டணங்கள் (1 நாள்)- | |
| | (1) மோட்டார் சைக்கிள் | 15 0 |
| | (2) முச்சக்கரவண்டி | 25 0 |
| | (3) மினிபஸ் | 50 0 |
| | (4) பேருந்து | 50 0 |
| | (5) துவிச்சக்கரவண்டி | 10 0 |
| 66 | கொல்கலக் கட்டணம் (1 மாடு) | 25 0 |
| 67 | வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று விற்பனை செய்தல் | 3,000 0 |
| 68 | கோழிக்கடை வைத்திருத்தல் | 3,000 0 |
| 69 | பயிற்சிக்கூடங்கள் நடாத்துதல் | 1,500 0 |
| 70 | நடமாடும் வியாபாரம் | 1,500 0 |
| 71 | 50 கோழிகளுக்கு குறையாத கோழிப்பண்ணை வைத்திருத்தல் | 3,000 0 |
| 72 | கடிகார விற்பனை, திருத்தம் செய்தல் | 1,500 0 |
| 73 | பாதணி விற்பனை நிலையம் | 1,500 0 |
| 74 | பூ மரங்கள் மரக்கன்றுகள் விற்பனை செய்தல் | 1,500 0 |
| 75 | கதிரைகள், பந்தல் சேவை | 2,000 0 |
| 76 | கண்ணாடி பொருத்தும் நிலையம் | 1,500 0 |
| 77 | அந்தியேட்டி மண்டப கட்டணம் (நிகழ்வு ஒன்றிற்கு) | 1,000 0 |
| 78 | துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடு, படிவம் | 20 0 |
| 79 | ஒலிபெருக்கி வாடகை | 1,000 0 |
| 80 | விளையாட்டு மைதானக் கட்டணம் (1 நாள்) | 2,000 0 |
| 81 | கவனிப்பாரற்ற மாடுக்ள பிடித்தல் கட்டணம் (1 மாடு) | 1,000 0 |
| 82 | கவனிப்பாரற்ற மாடுகள் பராமரித்தல் கட்டணம் (1 நாள்) | 250 0 |
| 83 | வியாபார பெயர் பதிவுக் கட்டணம் | 1,000 0 |
| 84 | பரிசோதனைக் கட்டணம் (1 கிமீ க்கு) | 35 0 |
| 85 | கருங்கற்கள் களஞ்சியப்படுத்தல், விற்பனை | 3,000 0 |
| 86 | கிரவல், மக்கி அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 67 5 |
| 87 | வாகனங்களை சேவீஸ் செய்யும் நிலையங்கள் | 3,000 0 |
| 88 | பெற்றோல் நிரப்பு நிலையம் | 3,000 0 |
| 89 | கடல் மீன் வியாபாரம் 1 கிகி க்கு | 10 0 |
| 90 | குளத்து மீன் வியாபார 1 கிகி க்கு | 5 0 |
| 91 | கட்டட விண்ணப்பம் (A, B) | 300 0 |

9-15

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2015 |
| | | வெள்ளி | 11.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2015 |
| | | வெள்ளி | 18.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2015 |
| | | வெள்ளி | 25.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2015 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2015 |
| | | வெள்ளி | 09.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2015 |
| | | வெள்ளி | 16.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2015 |
| | | வெள்ளி | 23.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2015 |
| | | வெள்ளி | 30.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2015 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2015 |
| | | வெள்ளி | 13.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2015 |
| | | வெள்ளி | 20.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2015 |
| | | வெள்ளி | 27.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.